உலகத்தவர் சந்தேகிக்க நேரிடும். இப்போது இஸ்லாத்துக்கிருக்கும் ராஜீய செல்வாக்குத் தாழ்ந்திருப்பதோடு அதன் கொள்கைகளும் பிரயோஜன மற்றவையென்று ஏற்படும். இப்படிப்பட்ட நிலைமைக்கு இஸ்லாம் வந்துவிடாமல் காப்பாற்றவேண்டுவது நம்முள் ஒவ்வொருவருக்கும் கடமையாயிருக்கின்றது.

"அவர்கள் தங்களுடைய வாயால் ஊதி அல்லாஹ"த் தஆலாவின் ஒளியை அணைக்க விரும்புகிறார்கள்; நம்பிக்கையற்றவர்கள் வெறுப்பாயிருந்தபோதிலும் அல்லாஹ"த் தஆலா தன் ஒளியைப் பூர்த்தியாக்குவதைத் தவிர வேறுவிதம் செய்ய இணங்கான்.

"பலதேவதை வணக்கக்காரர்கள் வெறுப்புடனிருந்தபோதிலும் எல்லா மார்க்கங்களைக்காட்டினும் இச்சன்மார்க்கம் சிலாக்கிய மடையும்படி அவன் செய்வதற்காக வழிகாட்டி யுடனும் உண்மையான மார்க்கத்துடனும் தன்னுடைய திருத்தூதரை அனுப்பியவன் அவனே." (அல்குர்ஆன், 9:32,33.)

கமலம்—2 1—7—20 இதழ்—7

அருளாளனும் அன்புடையோனுமாகிய
அல்லாஹ"த்தஆலாவின் திருநாமத்தால்.

நாம் இறைவனைப்புகழ்ந்து அவனது திருத்தூதர்மீதும்
வாழ்த்துக்கூறுகின்றோம்.

PHYSICALITY, MORALITY, SPIRITUALITY

ஆத்மாவின் முவ்வகைநிலை

நாம் இங்கு எடுத்துக்கொண்ட விஷயம் நமது ஆத்மாவின் முவ்வகைநிலை என்பதாகும். ஆத்மதத்துவநிலை (Spiri-

tuality) யைப்பற்றி உலகத்தாரெல்லாரும் அதிகமாகத் தான் பேசிவருகின்றனர்; ஆனால் அதை அறிகின்றவர்கள் மிகக்குறைவாகக் காணப்படுகின்றனர். ஆத்மதத்துவமெ ன்பது அறிஞர்கள் எழுதிய நூல்களைப் படிப்பதனாலுண் டாகும் புஸ்தகஞானமன்று; ஆனால் அவ்வாவரும் தம்தமு டைய மனப்பரிபக்குவத்தால் அடையும் உணர்ச்சிதான் ஆத்மதத்துவ நிலையாகக்காணப்படுவது. மனப்பரிபக்குவம் எவ்வளவுக்கெவ்வளவு தேர்ச்சியடைகின்றதோ அவ்வள வுக்கவ்வளவு ஆத்மதத்துவமும் முதிர்ச்சியடையும். மனி தன் இவ்வுலகில் தோன்றியதன் பயன் அவன் தன்னு டைய ஆத்மாவின் தத்துவத்தை யுணர்ந்து அதன் பயனா கத் தன் தலைவனையும் அறிந்து அவனுடன் கலப்பதுதான். அப்பொழுது தான் இரகசியவெளிப்பாடுகள் (இல்ஹாம்-பஷாரத்து) உண்டாகும். இவ்வளவு அருமையான மே ன்மை யெல்லாம் உண்டாவதால்தான் ஆத்மதத்துவத்தை ப்பற்றி அதிகமாக உலகத்தவர்கள் பேசிக்கொள்ளுகிறார் கள். இத்தகைய ஆத்மதத்துவத்தைப் பயிற்சி செய்வதை ப்பற்றி நாம் அதிககவனத்துடன் அடிக்கடி பிரசங்கங்களும் உபன்னியாசங்களும் கேட்கின்றோம். இக்காலத்தில் மட் டுமல்ல, இதற்கு முற்காலத்திலுள்ள கிரந்தங்களிலும் ஆத் மதத்துவத்தைப்பற்றி அறிஞர்கள் அதிகமாக எழுதியிருக் கின்றனர். "ஆத்மதத்துவம்" என்னும் பதமானது எல்லோ ருக்கும் அதிருசியாயிருக்கிறது. "ஏன்?" என்று கேட்கும் பக்ஷத்தில் யாரும் தக்க சமாதானம் சொல்லுவது முடி யாது. அறிந்தவரும் அறியாதவரும் ஆத்மதத்துவத்தைப் பற்றி அதிகமாய் வெறும்பேச்சுப் பேசிக்கொள்ளுகிறார் களே யொழிய அதன் உண்மையான நிலையைப்பற்றி மிகு தம்பேர் உணர்வதில்லை. ஆத்மாவின் ஸ்வரூபத்தைப்பற்றி

அறிய நாம் எவ்வளவுக்கெவ்வளவு பாடுபட்டபோதிலும் அது நம்முடைய பிரயத்தனங்களையெல்லாம் விழுங்கி நம்மையும் அந்தகாரத்திலேயே அலையவிட்டு விடுகின்றது. ஆத்மார்த்த ஞானத்தை (Spiritual wisdom) விருத்தி செய்ய அநேகம்பேர் அநேகவழிகளை யெல்லாம் தாம் கண்டுபிடித்துவிட்டது போல் எழுதியிருக்கின்றனர். ஆனால் அல்லாஹுத்தஆலாவால் அருளப்பட்ட திருவேதமாகிய எமது புர்க்கானுல் மஜீது என்னும் குர்ஆன் ஷரீபில் காணப் படுவதுபோல் வேறொருகிரந்தத்திலும் அவ்வளவு தெளிவான எளியமுறைகள் காணப்படவில்லை. எமது திருமறைதவிர வேறு ஜாதியாரின் வேதங்களில் கூறப்பட்டிருக்கும் வழிகளெல்லாம் விளக்கமில்லாமலும் அனுஷ்டிப்பதற்கு முடியாமலும் அமைந்திருக்கின்றன. ஆனால் எமது குர்ஆன்ஷரீபுமட்டும் ஆத்மாவின் தன்மையைப்பற்றிக் குழப்பமில்லாமல் விளக்கமாக எழுதி அந்நிலைமையை யடைதற்குவேண்டிய முறையையும் பட்டம் பகல்போல் திட்டமாய்க் காண்பிக்கின்றது.

ஆத்மதத்துவ நிலைமையைப்பற்றி எமது சுத்தசத்திய சன்மார்க்கமாகிய இஸ்லாம் எவ்வளவு அழகாகவும் எளிதாகவும் விளக்கமாகவும் காண்பித்திருக்கின்றது என்னும் உண்மையை இங்கு எழுதுமுன் ஆத்மாவுக்கும் தேகத்துக்குமுள்ள சம்பந்தத்தைப்பற்றி இதரமதத்தினர்கள் எவ்வாறு எண்ணியிருக்கிறார்கள் என்று நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். ஆத்மாவுக்கும் தேகத்துக்குமுள்ள சம்பந்தத்தைப்பற்றி அவர்கள் சொல்லி யிருப்பதெல்லாம் மனிதர்களுக்கு மிக்கமயக்கத்தை யுண்டாக்கக் கூடியதாயிருக்கிறதேயல்லாமல் அவர்களுக்கு ஒன்றும் தெளிவான வழியைக்காட்டுவதாயில்லை. தேகம் தனியே உற்பத்தியான பிறகு

அதற்குள் தேகி (ஆத்மா) வந்து நுழைந்து கொள்ளுகிற தென்றும் தேகமும் ஆத்மாவும் ஒன்றோடொன்று சம்பந் தப்படாத தனித்தனியான வஸ்துக்களென்றும் அவர்கள் சொல்லுகின்றனர். இவ்வாறு ஒரேமனிதனிடத்தில் தேக மும் தேகியும் (தேகி—ஆத்மா) தனித்தனியாய் ஒன்றோ டொன்று சம்பந்தப்படாமல் அமைக்கப் பட்டிருக்கின்றன வென்று அவர்கள் சொல்லுவதால் அவனுடைய ஸ்தூல தேகத்தின் சம்பந்தமாயுண்டாகும் செயல்களெல்லாம் ஸ்தூல காரியங்களென்றும் (Physicality) அவனது ஸூ க்ஷ்ம ஆவியின் சம்பந்தமாயுண்டாகும் காரியங்களெல்லாம் ஸூக்ஷ்ம காரியங்களென்றும் (Spirituality) பாகுபாடு செய்கின்றனர். தேகத்தின் ஸ்தூலகாரியங்களும் தேகியின் ஸூக்ஷ்மகாரியங்களும் ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லா மலிருப்பதோடு அவை ஒன்றோடொன்று முரண்பட்டும் இருக்கின்றனவென்று சொல்கின்றனர். இதனால் ஸூக்ஷ் மத்துக்கு விரோதமாகிய ஸ்தூலகாரியங்களை அடியோடு நசிக்கச்செய்தாலொழிய ஸூக்ஷ்மகாரியங்களில் வெற்றி யுண்டாவதில்லை யென்று அவர்கள் வாதாடுகின்றனர்; அதாவது, பஞ்சேந்திரியங்களையும் அறவே நிக்கிரகம் செய் தாலொழிய ஆத்மார்த்தம் சித்திப்பதில்லை யென்கின்றனர். பஞ்சேந்திரியங்களையும் நிக்கிரகம் செய்துவிட்டால் அதி னின்றும் ஆத்ம ஞானம் உதயமாகுமாம். உமக்கு ஆண்டவ னால் இயற்கையா யமைக்கப்பட்டிருக்கும் ஐம்புல ஆசை களையும் அடியோடு ஒழித்துவிட்டுச் சன்னியாசகோலத் தைக் கைக்கொள்வீரேல் அப்பொழுது தான் ஆத்மஞா னம் உமக்குச்சித்திக்கும் என்று அவர்கள் சொல் கின்றனர். இஃதென்ன அசம்பாவிதமான கொள்கையா யிருக்கின்றது! என்ன்!! இயற்கைக்கு முரணாகவும் புத்திக்

குப்பொருந்தாமலும் அவர்கள் வாதம் செய்கின்றனர்!!! எல்லாம் வல்ல இறைவனால் நமக்கு இயற்கையாகவே பிறக்கும்போதே அமைக்கப்பட்டிருக்கும் பஞ்சேந்திரியங்களையும் அடியோடு அழிக்கிறதாம், அதன் பின் ஆத்மஞானம் அடைகிறதாம்! கடவுளது கொடையான நமது இயற்கைக்குணங்களை எவ்வாறு நிக்கிரகம் செய்வது முடியும்? பஞ்சேந்திரியங்களையும் தப்பானவழியில் செலுத்துவோமாயின் அதனால் மெத்ததீங்குதானுண்டாகும். இக்காரணத்தால் பஞ்சேந்திரியங்களையும் அடியோடுநிக்கிரகம் செய்யவேண்டுமென்பது எவ்வாறு நியாயமாகும்? தாறுமாறாய்ப்பஞ்சேந்திரியங்களை உபயோகித்தால்தவறுகள் உண்டாக்கூடுமென்னுங்காரணத்தால் அவற்றை அடியோடே அழித்துவிட வேண்டுமென்று சொல்வோமாயின் கடவுளால் அப்பஞ்சேந்திரியங்கள் இயற்கையில் உண்டாக்கப்பட்டிருக்கவேண்டியதில்லையே. பஞ்சேந்திரியங்களையும் அடியோடு ஒழித்தால் தான் ஆத்மஞானம் சித்திக்குமென்பது அசம்பாவிதமாம்; ஆனால் அப்பஞ்சேந்திரியங்களை அளவுப்படி அடக்கியாண்டு ஆத்மஞான வழியில் பழக்கிவருவோமாயின் அதனால் மெத்தநலமுண்டாகி ஆத்மஞானத்திலும் நாம் முழுவெற்றியும் அடையலாம்.

உண்மையில் மனிதனுடைய மனமானது ஒன்றுக்கொன்று மாறான இரண்டுவகை அசம்பாவித பாகங்களால் ஒன்று சேர்த்து அமைக்கப்படவில்லை; ஆனால் அம் மனமானது ஒரே மனமாகத்தான் அல்லாஹுத் தஆலாவால் அமைக்கப்பட்டிருக்கிறது. வஸ்து வேறென்றும் அதன் ஆத்மா வேறென்றும் கருதவேண்டாம். ஜடமானது விருத்தியடைந்துகொண்டே வரும்போது அதன் ஒரு நிலைமையில் ஆத்மா வந்து நுழைகிறதாக மயங்கவேண்டாம்

ஸ்தூலமானது அணுவுக்குள் அணுவாய் மிகச் சிறுபொருளாயிருக்கும் ஸூக்ஷ்ம நிலைமையிலிருந்து (Crude electronic condition) சம்பூரண நிலையான மனிதனுடைய கதியையெட்டுமட்டும் ஆத்மாவும் ஜடத்துடன் எப்பொழுதும் கலந்தேயிருக்கின்றது. இஸ்லாமியக் கொள்கைப்படி ஜடத்திலேயே ஆத்மா உதிப்பதாயிருக்கிறது. அதாவது, ஸ்தூலத்தின் வயிற்றிலேயே ஸூக்ஷ்மம் பிறக்கின்றது. ஜடபதார்த்தம், ஸ்தூலத்தையும் (Material condition) அதற்கு முன்னுள்ள ஸூக்ஷ்மத்தையும் (electronic condition) அடையுமுன் ஒருவித மாயா நிலைமையில் (ethereal stage of matter) இருக்கிறது; அந்த மாயா நிலையிலிருக்கும்போதே ஜடத்துடன் ஆத்மாவானது மகா ஆரம்பஸ்திதியில் (embryonic state) காணப்படுகிறது. ஜடபதார்த்தம் தன் மாயா நிலைமையிலிருந்து பல துறைகளின் வழியாய் மனித நிலைமையை யடையும்போது மகாஆரம்பஸ்திதியிலிருந்த ஆத்மாவும் மனிதனுடம்பில் சம்பூரண நிலைமையை யடைகின்றது. இதைப்பற்றிய முழு விவரமும் பின்னொருமுறை இன்னும் விரிவாய் விளக்கிக் காட்டப்படும்.

மனிதனுடைய நிலைமையை உற்று நோக்கும்பக்ஷத்தில் அவனுடைய ஸ்தூல காரியங்களும் (Physicality) ஸூக்ஷ்ம காரியங்களும் (Spirituality) ஒன்றோடொன்று மாறுபட்டவை அல்லவென்னும் உண்மை விளங்கும். இவ்விருவகைக் காரியங்களையும் ஒன்றோடொன்று இணைத்துக் காட்டுதல் முடியாதென்று கருதவேண்டாம். மனிதனுடைய ஆத்மாவின் தன்மை இன்னதென்று ஆழ்ந்து ஆராய்ச்சி செய்யப்புகின் அதில் ஸ்தூல காரியங்களும் ஸூக்ஷ்ம காரியங்களும் மட்டுமே இருப்பதாகப் புலப்பட

வில்லை. ஸ்தூல காரியங்களுக்கும் ஸூக்ஷ்ம காரியங்களுக்கும் இடையில் இன்னொரு நிலைமை காணப்படுகின்றது. இந்த நடு நிலைமைதான் ஸ்தூல காரியங்களையும் ஸூக்ஷ்ம காரியங்களையும் ஒன்றோடொன்று சேர்த்துப் பிணைப்பது; இந்த நிலைமைக்கு ஸன்மார்க்க நிலைமையென்று பேர். இதுதான் ஸ்தூல நிலைமைக்கும் ஸூக்ஷ்ம நிலைமைக்கும் இடையிலிருப்பது. ஆகவே ஸ்தூலம், ஸன்மார்க்கம், ஸூக்ஷ்மம் இம்மூவகை நிலைமையும் ஒரே ஆத்மாவின் மூன்று வித நிலைமைகளா யிருக்கின்றனவே யன்றி இம்மூன்றும் வெவ்வேறு தனியான வஸ்துக்களென்று மயங்கவேண்டாம். ஆதலின் ஸூக்ஷ்மகாரியங்களை அடைதற்கெல்லாம் ஸ்தூலகாரியங்கள் அத்தியாவசியமா யிருக்கின்றன. ஸ்தூல காரியங்கள்தான் ஸன்மார்க்க காரியங்களின் வழியே ஸூக்ஷ்ம காரியங்களாக மாறுதலடைந்து முதிர்ச்சி பெறல் வேண்டும். ஸ்தூல காரியங்களை மிகத் தாழ்ந்த மிருகத்தன்மையிலிருந்து பக்குவப்படுத்தி மானிடத் தன்மையை யடையும்படி செய்து இரண்டாவது நிலையான ஸன்மார்க்க காரியங்களாகச் செய்துவிடலாம். ஸன்மார்க்க காரியங்களை இன்னும் பரிபக்குவ மடையும்படி செய்து உன்னதப் பதவிக்குக் கொண்டு சென்றால் அவை ஸூக்ஷ்ம காரியங்களாக மாறிவிடுகின்றன. ஆகவே ஸ்தூல காரியங்கள்தாம் ஸன்மார்க்க காரியங்களின் வழியே ஸூக்ஷ்ம காரியங்களாகத் தேர்ச்சி யடைகின்றன. இதன் உண்மையை ஆராய்ச்சி செய்யும்பொருட்டு நாம் ஓர் உதாரணத்தைக் கவனிப்போம். நாம் சாதாரணமாய்ச் செய்யும் ஒவ்வொருகாரியத்துக்கும் ஒவ்வொரு மூலகாரணம் நம்முடைய மனத்தில் குடிகொண்டிருக்கிறது; இக்காரணத்தால்தான் "என்னுடையது," "உன்

னுடையது" என்னும் வியவகாரம் உதிக்கின்றது. "என்னுடையது," "உன்னுடையது" என்னும் பாத்தியா பாத்திய சம்பந்தமான ஸ்தூல காரியங்கள் மனிதர்களிடத்தில் மட்டும் காணப்படுவதாய் எண்ணவேண்டாம்; இத்தகைய ஸ்தூலகாரியங்கள் ஐயறிவை மட்டுமுடைய மிருகங்களிடத்திலும் காணப்படுகின்றன. ஸ்தூல சம்பந்தமான எண்ணங்கள் மிருகத்தினிடத்தில் உதிக்கும்போது தனக்கு எதிரில் காணப்படும் எந்த வஸ்துவைக் கொண்டும் அம்மிருகம் தன் எண்ணத்தைப் பூர்த்தி செய்து கொள்ளுகின்றது. ஒரு வஸ்துவைக்கொண்டு தன் எண்ணத்தைப் பூர்த்தி செய்துகொள்ளும்போது அவ்வஸ்து இன்னாருக்குச் சொந்தமுள்ளதென்று அம்மிருகம் எண்ணுவதில்லை. ஒரு மிருகத்துக்கு (உதாரணமாக மாட்டுக்கு)ப் பசிவரும்போது யாருடைய வைக்கோலா யிருந்தாலும் அதைத் தின்று தன் பசியைத் தீர்த்துக்கொள்ளுகிறது. தனக்குச் சொந்தமான 'வைக்கோல்தானுவென்று அம்மாடு சிந்திப்பதில்லை. மனிதர்களுள்ளும் சிலர் இவ்வாறு மிருகம்போல் இருக்கின்றனர். இவர்களுக்கு அவசியம் நேரும்போது வேறொருவருக்குச் சொந்தமான பொருள்களைத் தம்முடையதாக அபகரித்துக் கொள்ளுகின்றனர். தமக்குச் சொந்தமல்லாததை அபகரிக்கும்போது அது வேறு யாருக்குச் சொந்தமென்று இவர்கள் எண்ணுவதில்லை. யாருடைய பொருளையும் தம்முடைய சொந்தமென்றே கருதுகின்றனர். இப்படிப்பட்ட மிருகப் பிராயமான மனிதர்கள் தம் மனத்தில் ஓர் எண்ணம் உதயமானவுடன் யாருக்குச் சொந்தமான பொருளாயிருந்தாலும் தம் கண்ணெதிரில் காணப்படும் வஸ்துவைக்கொண்டு தம் எண்ணத்தைப் பூர்த்தி செய்து

கொள்ளுகின்றனர். இப்படிப்பட்ட ஸ்தூல காரியங்களுக்கு மிருகப்பிராயமான ஸ்தூல காரியங்களென்று பேர். இந்த நிலைமையிலிருக்குமட்டும் மனிதன் இவ்வுலகிலுள்ள ஒவ்வொரு வஸ்துவையும் அது யாருக்குச் சொந்தமா யிருந்தபோதிலும் "அது என்னுடையது" என்று பேராசை கொள்ளுகிறான்; பிறருடைய பொருளையெல்லாம் தன்னுடையதென்று பேராசையால் கருதுகிறான்; பிறருடைய வஸ்துக்களெல்லாம் நியாய வழியாலோ அநியாயவழியாலோ தன்னிடம் வந்துவிட வேண்டுமென்று கள்ள எண்ணங் கொள்ளுகிறான். ஆனால் மனிதன் இப்படிப்பட்ட மிருகத்தன்மையைவிட்டு"என்னுடையது" வேறு"உன்னுடையது"வேறு என்று தன் பொருளுக்கும் பிறர்பொருளுக்கும் வேறுபாடு இருப்பதை உணர ஆரம்பிக்கும்போதுதான் அவன் ஸ்தூல நிலைமையிலிருந்து ஸன்மார்க்க நிலைமையை யடைகிறான். ஸன்மார்க்க நிலைமையின் முக்கியக் கொள்கையாவது, பிறருடைய பொருளை நம்முடையதென்று கள்ள எண்ணங் கொள்ளாமல் அவரவருடைய பொருளை அவரவருடையதென்று நாம் ஒத்துக் கொள்ளுவதுதான். ஆதலின் ஸன்மார்க்க நெறியிலுள்ளவர்கள் பிறருடைய பொருளைப் பிறருடையதென்றே ஒத்துக்கொள்ளவேண்டும். மிருகத் தன்மையான ஸ்தூல காரியங்களிலிருக்கும்போது "என்னுடையது," "உன்னுடையது" என்னும் வித்தியாசமில்லாமல் எல்லாம் "என்னுடையது"என்றே எண்ணுகிறேன். ஸ்தூல காரியங்களை விட்டு ஸன்மார்க்க காரியங்களைச் செய்ய ஆரம்பிக்கும்போது" என்னுடையது" மட்டுமே எனக்குச் சொந்தம், "உன்னுடையது" உனக்குச் சொந்தமென்று கருத ஆரம்பிக்கின்றேன். ஆதலின் ஸன்மார்க்க நெறியிலுள்ளவர்க

ளுக்குப் பிறர் பொருளை இச்சித்தல் என்னும் எண்ணமே மகாகொடிய தோஷமாய்க் காணப்படுகிறது.

இப்படிப்பட்ட ஸன்மார்க்க காரியங்களையே பலர் ஸூக்ஷ்மகாரியங்களாக எண்ணி மயங்கி விடுகின்றனர். இவ்வாறு ஸன்மார்க்காரியங்களையே ஸூக்ஷ்மகாரியங்களென்று நினைப்பது தவறாகும். ஸன்மார்க்க காரியங்களே மிகவுயர்ந்த பதவியில் ஸூக்ஷ்மகாரியங்களாக மாறிய போதிலும் இரண்டும் ஒன்றென்று கருதி மயக்கங்கொள்ள வேண்டாம். இவைஇரண்டும் இரண்டுவிதவேறு பாட்டையுடைய தனித்தனி நிலைமையாகும். ஸன்மார்க்க காரியங்களைவிட ஸூக்ஷ்மகாரியங்கள் மிகவும் உன்னத நிலைமையிலிருக்கின்றன. மிருகங்களிடத்திலிருக்கும் சாதாரண அவா மனிதனிடத்திலும் ஸ்தூலகாரியங்களாய்க் காணப்படுகின்றன. இந்தஸ்தூல காரியங்களில் "என்னுடையது" "உன்னுடையது" என்னும் வேறுபாடு தோன்றாமல் எல்லாம் "என்னுடையதாகவே" காணப்படுகின்றன. இப்படிப்பட்ட காரியங்களில் "என்னுடையது" இன்னதென்றும் "உன்னுடையது" இன்னதென்றும் பகுத்துணர்ந்து, "என்னுடையது" மட்டும் எனக்கு இருக்கட்டும், "உன்னுடையது" உன்னிடத்திலிருக்கட்டும், "உன்னுடையது" எனக்கு வேண்டாம், என்று நிராசைகொள்வதுதான் ஸன்மார்க்கமாகும். இதற்குமேல் ஸன்மார்க்கம் போவதில்லை. இதைக்காண இன்னும் உன்னதமும் மேன்மையும் பொருந்திய பக்குவ நிலைமைக்குரியகாரியங்களுக்குத்தான் ஸூக்ஷ்மகாரியங்களெனப்பெயர். அந்த நிலையில் நாம் இருக்கும்போது நமது சுயநயத்தை நசிக்கச்செய்து "நம்முடைய" பொருளையெல்லாம் பரோபகாரத்துக்காகச் செலவு செய்கின்றோம். பிறருடைய நன்மைக்காகத்தான் நம்மு

டைய பொருள் நம்மிடம் இறைவனால் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறதென்று நாம் எப்பொழுது நினைக்க ஆரம்பிக்கின்றோமோ அப்பொழுது தான் ஸன்மார்க்க நிலையிலிருந்து ஸூக்ஷ்ம நிலைமையை யடையத்தக்க யோக்கியதை நமக்கு உதயமாகின்றது என்று கருதவேண்டும். நம்முடைய உடல் பொருள் ஆவியை யெல்லாம் உலகத்தவரின் உதவிக்காகத் தத்தம்செய்யும் நிலைமை வருமட்டும் ஸூக்ஷ்மகாரியங்களில் நாம் வெற்றியடைந்தவராகக் கருதப்பட மாட்டோம். இப்படிப்பட்ட மகோன்னத நிலைமைக்கு நாம் வரும்போது தான் இவ்வண்ட கோளத்தின் கண்ணுள்ள எல்லாவஸ்துக்களின் நன்மைக்காகவும் மேன்மைக்காகவுமே நாமும் நமது ஐசுவரியமும் படைக்கப்பட்டிருக்கிறோமென்று எண்ணுவோம். அப்பொழுது "என்னுடையது" என்னும் பொருளெல்லாம், "உன்னுடையதாகவே" காணப்படும். நமக்கென்று ஒன்றும் தனியே யில்லாமல் எல்லாம் பரனுக்காகவே அர்ப்பணம் செய்தல் வேண்டும். அப்பொழுதுதான் அந்தப் பாரஸீக தேசத்துப் புலவர் சொல்வதுபோல், "உலகமென்று சொல்லத்தக்க இக் கூண்டினின்றும் நான் வெளியேறிவிட்டேன்; வானுலகத்தின் சிம்மாசனத்தின் உச்சிதான் இப்பொழுது நான் நிலைத்திருக்கத்தக்க இடம்," என்று நாம் சொல்லித் திருப்தியடைதல் முடியும். இறைவனது படைப்புக்களின் 'நன்மைக்காவும் மேன்மைக்காகவும் நம்முடைய சுய நலத்தையெல்லாம் தத்தம் செய்யும்போது நம்மீது நமது இறைவன் தன் கருணைமாரியைக் கணக்கில்லாமல் பொழியச்செய்கிறான். அப்பொழுது அவ்விறைவனுடன் நாம் ஒன்றித்துப்போகிறோம்; நமக்கு அந்நிலைமையில் இல்லூறாமும் பக்ஷாரத்தும் உதயமாகின்றன. இறைவனுடைய

காரியம் எல்லா ஜீவன்களையும் பாதுகாப்பது ; இப்படியே நாமும் நம்முடைய பொருளை இறைவன் பொருட்டு இதர ஜீவன்களுக்காகச் செலவுசெய்யும்போது நமது இறைவனுக்கு நம்மீது கருணை உதிக்கின்றது. இப்படிப்பட்ட மகோன்னத நிலைமையை யடையும் மார்க்கம் இன்னதென்று காண்பிப்பதற்காகத்தான் "அர்ரஹ்மானு அல்லமல் குர்ஆன்," (அர்ரஹ்மான் அல் குர்ஆனைக் கற்பித்தான்) என்று எமது இறைவன் கூறியுள்ளான். எல்லா ஜீவன்களின் பாதுகாப்புக்காகவும் வேண்டிய எல்லாப்பொருள்களையும் இனமாக அளிக்கத்தக்க அல்லாஹு த்தஆலாவின் திருக்கல்யாண குணமாகிய ரஹ்மானியத்து என்னும் பேரானந்தக்கடலில் நாம் ஆழ்ந்திருக்கும் போதுதான் நாம் ஆண்டவனது இரகசிய ஞானமாகிய இல்ஹாமை யடைய யோக்கியதை பெறுகின்றோம்.

நாம் இதுவரையில் மேலே கூறிவந்த விஷயங்களை இங்கொரு முறை ஆராய்ச்சி செய்வோமாயின், மனிதன் தன்னுடையதென்றும் பிறருடையதென்றும் வேறுபாடு செய்யாமல் இவ்வுலகிலுள்ள எல்லாப்பொருளும் தன்னுடையதே யென்று மமதையால் எண்ணித் தன் ஸ்தூல காரியங்களை மனம்போனபடி விடுவானாயின் அவன் மிருகத்தன்மையான நிலைமையிலேயே யிருக்கத் தக்கவனாகிறான்; "என்னுடையது" இன்னதென்றும், "உன்னுடையது" இன்னதென்றும் வேறுபாடு தெரிந்துகொண்டு பிறர் பொருளில் இச்சையைச் செலுத்தாமல் நிராசையோ டிருப்பானாயின் அவனிடத்தில் ஸன்மார்க்கயோக்கியதை காணப்படுகின்றது. நம்முடைய சுய நலத்துக்காக நமக்கே சொந்தமாய் ஆண்டவன் அருளியிருக்கும் நம்முடைய உடல்பொருள் ஆவியை யெல்லாம் ஒருசிறிதும்

மனங்கோணுமல் புன்சிரிப்பான முகமலர்ச்சியுடன் பரோபகார நிமித்தம் தத்தம் செய்வோமாயின் அப்பொழுதுதான் நம்முடைய நிலைமை ஸூக்ஷ்ம பதவியை யடைகின்றது. ஆகவே ஸ்தூலகாரியங்களை அடியோடு நசிக்கச் செய்வது தான் ஸூக்ஷ்மகாரியங்களை அடைவதற்குரிய வழியென்று எண்ணுவது தவருகும்; இன்னும் ஸன்மார்க்க காரியங்களில் சிலவற்றை வைத்துக்கொண்டு அவைதான் ஸூக்ஷ்மகாரியங்களென்று எண்ணுவதும் தவறேயாகும். மிருகப்பிராயமான ஸ்தூலகாரியங்களை ஒழுங்கு படுத்திஞல் அவை ஸன்மார்க்ககாரியங்களாகும்; இந்த ஸன்மார்க்ககாரியங்களைப் பரிபக்குவமடையும்படி செய்வோமாயின் அவையே ஸூக்ஷ்ம காரியங்களாக முதிர்ச்சியடையும். நம்முடைய சுயநலங்களையெல்லாம் மாற்றி அவற்றைப் பரோபகார நிமித்தம் செலவுசெய்வோமாயின் ஸூக்ஷ்மநிலையையடைவோம்; சுருங்கச்சொல்லுமிடத்து, உலகத்திலுள்ள எல்லா வஸ்துக்களையும் "என்னுடையது" என்று நாம் எண்ணுமட்டும் மிருகத்தன்மையான ஸ்தூலத்தின் பாதாளத்தில் அழுந்திக்கிடக்கிறேம்: "என்னுடையதை" என்னுடையதென்றும் "உன்னுடையதை" உன்னுடையதென்றும் அறிந்து கொண்டு பிறர் பொருளில் இச்சைவையாமல் நிராசையாயிருக்கக் கற்றுக்கொள்ளுவோமாயின் மிருகத்தன்மையிலிருந்து ஸன்மார்க்க நிலைமைக்கு உயர்கிறேம்; இந்நிலையிலிருந்து "என்னுடையது" ஒன்றுமில்லை, எல்லாம் "உன்னுடையதே" என்று எண்ணிப் பரோபகாரசிந்தையில் முதிர்ச்சியடைவோமாயின் ஸூக்ஷ்ம நிலைமையென்னும் மகோன்னத பதவியை யெய்துகின்றேம்.

மனிதனுடைய ஆத்மாவின் இப்படிப்பட்ட மூவ்வகை

நிலைமையைப்பற்றி எமது அல்புர்க்கான் என்னும் குர்ஆன் ஷரீபு வேதம் எவ்வளவு அழகாக வருணித்திருக்கிற தென்று கவனியுங்கள்:—

1. "நபுஸி அம்மாரா" (கட்டளையிடுவதில்லைதேர்ந்த ஆத்மா) என்னும் முதல் நிலைமையானது மனிதனுடைய ஸ்தூலகாரியங்களை எப்படி யாவது எவருடைய பொருளைக் கொண்டேனும் திருப்திசெய்து கொள்ளும் மிருகத்தன்மையான தாழ்ந்த நிலைமையைக் காட்டுகின்றது. இதுதான் ஸ்தூலநிலைமை (Physical stage).

2. "நபுஸி லவ்வாமா" (தன்னிடத்தே குற்றங் கற்பிக்கும் ஆத்மா) என்னும் இந்த இரண்டாவது நிலைமையானது பிறர் பொருளில் ஆசைகொள்ளாது தனக்குள்ளதில் திருப்தியடைந்து நிராசையாயிருக்கும் தன்மையைக் கற்பிக்கின்றது. இதுதான் ஸன்மார்க்க நிலைமை (Moral stage).

3. "நபுஸி முத்ம இன்ன" (சாந்திநிலைமையிலிருக்கும் ஆத்மா) என்னும் கடைசி நிலைமையானது சுயநலத்தைப் போக்கிப் பரோபகார சிந்தனையை மிகுதிப்படுத்துகின்றது. இதுதான் ஸூக்ஷ்மநிலைமை (Spiritual stage).

எல்லாம் "என்னுடையதே" என்பது "நபுஸி அம்மாரா"; "என்னுடையது" எனக்குச்சொந்தம், "உன்னுடையதை" நான் ஆசிப்பதில்லை, என்பது "நபுஸிலவ்வாமா"; "என்னுடையது" ஒன்றுமில்லை, எல்லாம் "உன்னுடையதே" என்பது "நபுஸி முத்மஇன்ன".

"நபுஸிமுத்ம இன்ன" என்னும் உன்னதபதவியில் ஆழ்ந்து நமது உடல்பொருள் ஆவியை யெல்லாம் உலகத்தின் ஈடேற்றத்தின் பொருட்டுத் தத்தம் செய்ய ஆரம்பித்து விட்டால், இவ்வுலக சம்பந்தமான கவலையும் துக்க

மும் வந்நடைய முடியாத ஆண்டவனது திருச்சந்நி தானத்தில் எப்பொழுதும் நாம் பேரானந்தத்தையும் பெரிய சுகத்தையும் சதா சான்னித்தியமாக அனுபவித் துக்கொண்டேயிருப்போம். இதுதான் ஸுக்ஷ்ம நிலைமை யின் மகோன்னதவெற்றியென்பது; இதைப்பற்றித்தான் எமது குர்ஆன்ஷரீபு பின்வருமாறு கூறுகின்றது:—

"27 ஏ, சாந்தியடைந்துகொண் டிருக்கிற ஆத்மா வே! 28உன்னுடைய இறைவனுடன் திருப்தியடைந்து கொண்டும் அவனுக்குத் திருப்தி செய்துகொண்டும் அவ னிடம் திரும்புவாயாக. 29 ஆதலின் என்னுடைய வேலைக் காரரிடம் நுழைவாயாக; 30 இன்னும் என்னுடைய சுவர்க்கத்தில் (ஜன்னத்தில்) புகுதுவாயாக."—அல்குர் ஆன், 89:27—30.

முழுமுதற் கடவுளான நம் இறைவனுடன் கலந்து அவனுடன் திருப்தியடைந்து அவனுடைய சாந்தியையும் சுத்தபரிபூரணச் சுகவாரியையும் பெற்று அவனது கல்யா ணகுண கணங்களில் ஆழ்ந்து ஆனந்தம் அனுபவிக்கும்படி யான அந்த மகா உன்னத ஸுக்ஷ்ம நிலையை மேற்கூறிய 4 திருவாக்கியங்களும் அறிவிக்கின்றன. இப்படிப்பட்ட நிலையைத்தான் சுவர்க்கானந்தம் என்கிறோம். மனிதன் பரிசுத்தமான சம்பூரணமனத்துடன் உண்மைக்கு உழை த்து உலகத்திய ஜீவன்களெல்லாம் உஜ்ஜீவிக்கும் பொரு ட்டுத் தன் உடல் பொருள் ஆவியையெல்லாம் இறைவன் வழியில் தத்தம் செய்து உயரியபதவியை அவன் அடையும் போது அவனுக்கு ஆண்டவன் இப்பதவியிலேயே சுவர்க் கானந்த இன்பத்தை அளிக்கிறான். மற்றமனிதர்களெல் லாம் மரணமானபின் வைகுந்தத்தை எதிர்பார்க்கும் போது மேலே சொன்ன மனிதன் மட்டும் இவ்வுலகிலே

யே ஜன்னத்தை யடைகிறான். இந்த நிலையை அடை வதற்கு முன் அவனுக்கொரு வீண் சுமையாய்க் காணப் பட்ட தெய்வவணக்கம் இப்பொழுது தன் ஆத்மாவின் சுகத்துக்கு ஒரு துணையாகவும் மேலும் வெளகிகால் மேன்மையடைவதற்கு இந்த வணக்கம் ஓர் இன்றியமை யாத அஸ்திவாரமாகவும் காணப்படும். இகலோகத்தில் செய்யும் வணக்கத்துக்கு இவன் இங்கேயே பலனையடை கிறான். ஆத்மா ஸன்மார்க்க (லவ்வாமா) நிலைமையிலிருக் கும்போதும் தன்பொருளைப் பிறர் பொருட்டுத் தத்தம் செய்ய மனம் வருவதில்லை. பிறர் பொருளை நாம் இச்சியா விட்டாலும் நம்பொருளை லவ்வாமா நிலைமையில் பிறருக் காகச் செலவு செய்ய மனம் வருவதில்லை. 3 - வது நிலைமையான முத்மஇன்ன ஸ்தானத்துக்கு வரும்போது தான் "என்னுடையதெல்லாம்" "உன்னுடைய" தாகி விடு கின்றது. இதுதான் பேரானந்தத்துக்குரிய ஸௌக்ஷ்ம நிலையாகின்றது. இங்கே மனிதன் தன் தீயகுணங்களை யெல்லாம் விட்டுச் சுத்தசைதன்யமாய் மாறிவிடுகிறான். அந்த நிலைமையில் தான் ஆத்மா ஆனந்தமயமான சைதன்ய தரிசனமென்னும் இல்ஹாமை இடைவிடாது இறைவனரு ளால் அனுபவித்துக்கொண்டே யிருக்கும்.